**பேராதனை பல்கலைக்கழகம் - 2023**

-----------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகபங்கள் சட்டத்தின் 107(5) மற்றும் 108(1) ஆம் உப பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

-

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பல்கலைக்கழகத்தை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 19 ஆம் பந்தியின் பிரகாரம் பல்கலைக்கழக வளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீதி முறைமைகள், மல அகற்றும் முறைமை, நீர்க் குழாய்கள் மற்றுதம் தொடர்பாடல் உபகரணங்கள் முறைமை என்பன இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழக ஆரம்பத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீதிகள், நீர் குழாய்கள் மற்றும் மல வடிகால் முறைமை வேறாக இனம் காண்பது சிக்கலான செயற்பாடாக இருந்ததுடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் நீர் குழாய்கள் மற்றும் மல வடிகாலமைப்பு முறைமை இனங் காணப்பட்டு எதிர் காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 02 ஆக்கஉரிமை அனுமதி பத்திரங்கள் வணிக பயன்படுத்தலுக்கு உட்படுத்தாமல் ரூபா 11,050,000 தொகை ஒன்று பல்கலைக்கழகத்துக்கு கிடைத்திருந்த போதும் அந்த ஆக்க உரிமை அனுமதிபத்திரங்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 20 | பல்கலைக்கழகத்திறகு சொந்தமான அனைத்து ஆக்கஉரிமை அனுமதிப்பத்திரங்களும் கணக்கீட்டு நியமம் 20 இன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிலிருந்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

இன் பிரகாரம் கற்பனைச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கால்நடை மருத்துவ பீடத்திலும் விவசாய விஞ்ஞான பீடத்தின் பண்ணைகளிலிருந்து கிடைத்திருந்த ரூபா 70,124,305 ஆன விற்பனை வருமானம் மற்றும் ரூபா 100,488,387 செலவினம் பல்கலைக்கழகத்தின் வருமானம் மற்றம் செலவினமாக இனங்காணப்பட்டு நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அத் திட்டங்களில் வருமானம் மற்றும் செலவினம் பல்கலைக்கழக வருமான செலவினமாக கணக்கீடு செய்யப்படுகின்றதுடன் எஞ்சிய மீதி நிதியக் கணக்கில் பேணிச் செல்வதாக | பல்கலைக்கழக வருமான செலவினமாக நிதி செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட எடுக்கப்படும். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை செயற்படுத்தயிருந்த சுயநிதியிடலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 19,352,214 தொகை நிதியக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | சுயநிதியிடல் செயல்பாடுகள் முடிவடைந்த பின்னர் பல்கலைக்கழகத்திற்குரிய நிதியத்திற்குரிய பணம் மாற்றல் மேற்கொள்ளப்படுகின்றது. | குறித்த பணத்தை பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 மே 05 ஆம் திகதி 09/2022 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் 3,695,014 ஆன விளையாட்டு பொருட்கள் மற்றும் உபகாணங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்படாத இருந்ததுடன் அதற்குரிய ரூபா 923,753 ஆன பெறுமாதேய்வு மற்றும் மின்பிறப்பாக்கி இயந்திரங்களுக்குரிய ரூபா 2,378,036 புஆன பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அவ் விளையாட்டு பொருட்கள் மற்றும் உபகரணங்கள் மூலதனத் தன்மையிலான பொருட்கள் அல்லாததால் அவை மீண்டெலும் தன்மையிலான செலவினமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாக. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பிணையாளிகள் அல்லது பிணையாளிகளா எனக் கண்டுபிடிக்க முடியாத இனங் காணப்பட்டிருந்த 22 ஆண்டுகள் முதல் 53 ஆண்டுகள் காலம் கடந்து அறவிடப்படாமல் காணப்படும் கல்வி பதவியணியில் சேவை புரிந்த 64 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 29,523,940 ஆன பிணை பெறுமதிக்காக அறவிட முடியாத கடனுக்காக ஒதுக்கீடு செய்யாமல் மேலும் நடைமுறை சொத்தாக நிதி கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பிணையாளிகள் அல்லது சேமலாபநிதியிலிருந்து அறவிடுவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதால், மிகக் குறுகிய காலத்திற்குள் அறவிடுவதற்காக அவை நடைமுஜறச் சொத்துக்களாகக் கணக்கிடப்படுகின்றன. | பெற வேண்டிய நிலுவைகளில் உள்ள நிச்சயமற்ற நிலுவைகளை சரியாகக் கண்டறிந்து, அதற்கு அறவிட முடியாக் கடன் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்குரிய 16 வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 48,027,480 ஆன பாடநெறி கட்டணங்கள் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் பல்கலைக்கழகத்தின் பல் | 16 வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 48,027,480 பெறுமதி எதிர்காலத்தில் கணக்கீடு செய்யப்படுவதாகவும் | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரியான பெறுமதிகள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மருத்துவ பீடத்தின் வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,289,205 வருமானமாக இனங்காணாமல் நிதியக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ரூபா 1,289,205 தொகை வெளிநாட்டு பட்டப்பின் படிப்பை மேற்கொள்ளும் பல் மருத்துவ விஞ்ஞான மாணவர்களின் குறுங்கால பாடநெறி வருமானமாகும். | |
| (ஊ) | குத்தகை அடிப்படையில் திவிநெகும திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த 1987 ஆம் ஆண்டில் கையளிக்கப்பட்டிருந்த பல்கலைக் கழகத்திற்குரிய கெட்டம்பே பிரதேசத்தில் அமைந்துள்ள 40 பேர்ச் அளவிலான காணி 1988 சனவரி 01 ஆந் திகதி முதல் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கு கிடைக்க வேண்டிய குத்தகை பணம் ரூபா 11,550,000 ஆன குத்தகைத் தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 – 2023 வரையான காலப்பகுதிக்கரிய முறையான உடன்படிக்கை ஒன்று இல்லாமை காரணமாக அக்காலப்பகுதிக்கான குத்தகைவருமானத்தை கணக்கீடு செய்வதற்கு முடியாத உள்ளதாக | அனைத்து வருமானங்களையும் கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் நிலுவைலயாக காணப்படும் குத்தகை தொகையை விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 5,975,650 ஆன மருத்துவ ஆய்வுகூட வருமானம் பல்கலைக்கழகத்தின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இத்தவறினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பல்கலைக்கழக வருமானமாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஓ) | வதிவற்ற அன்னிய செலாவணி கணக்கில் மீளாய்வாண்டின் இறுதியிலான வாங்கி நிறுத்தியில் ரூபா 4,104,684 ஆன அந்நியச் செலாவணி பரிமாற்றல் நட்டம் ரூபா 4,635,443 ஆன அந்நிய செலாவணி பரிமாற்ற இலாபமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை மற்றும் காசு மற்றும் காசுக்கு சமமான ரூபா 8,740,127 ஆல் குறைத்தும் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | இத்தவறினை எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அந்நியச் செலாவணி பரிமாற்றத்தின் பேரில் உருவாகும் இலாபத்தை அல்லது நட்டத்தை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட வேண்டும். |
| (ஔ) | பிணை முறி மீறிய 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 17,446,675 தொகையை நிதி நிலைமைக் கூற்றில் பெற வேண்டிய வருமானமாக காண்பிக்கப்பட்டு இருக்கும் போது நிதிக் கூற்றுகளில் கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் வெளிப்படுத்தலின் கீழ் அப்பெறுமதி நிகழத்தக்க சொத்தாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | நிச்சயமற்ற நிலைமையில் காணப்படும் மீதிகள் தொடர்பான கணக்கீட்டு இணைப்பொன்று இதற்காக வழங்கப்பட்டுள்ளதுடன் பெற வேண்டிய மீதிகளை நிச்சயமற்ற சொத்துகளாக கணக்கீடு செய்யடப்பட வில்லை என்பதாக | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிச்சயமற்ற மீதிகளாக இனங்காணப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**பெற வேண்டிய தொகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி வரை மாணவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா | 02 - 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட வரைலயான ரூபா 594,953 ஆன நிலுவை | அனைத்து கட்டணங்களையும் விரைவில் அறவிடப்பட |

| | | | |
|---|---|---|---|
| | 1,175,380 ஆன மீதிகளில் ரூபா 594,953 ஆன நிலுவை தண்டப்பணத் தொகை விடுதிக் கட்டணங்கள் 02 ஆண்டுகள் முதல் 05 ஆண்டுகள் வரைலயான காலமாகவும் ரூபா 580,427 ஆன மீதியொன்று 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | தண்டப்பணத் தொகை அறவிடப்பட்டு வருவதுடன் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகளுக்குரிய மாணவர்களின் பதிவு இதுவரை இரத்துச் செய்யப்படவில்லையென்பதால் புத்தகங்களிலிருந்து பதிவழிக்க இயலுமை காணப்படவில்லை. | வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ஓய்வுபெற்ற, சேவையில் இருந்து விலகிய, இடமாற்றம் செய்யப்பட்ட 14 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,362,330 ஆன கடன் மீதிகளின் அறவீடு இடைநிறுத்தப்பட்டிருந்த போதும் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | குறித்த உத்தியோகத்தர்களின் சேமலாப நிதியத்திலிருந்து அதனை விடுவிக்கும் போது இக்கடன் மீதிகளை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் | அனைத்து முற்பணக் கடன் மீதிகளி அறவிடப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பாராளுமன்ற சட்டங்கள் | | | |
| i. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஆ) | மீளாய்வாண்டில் பல்கலைகத்தின் விஞ்ஞான பீடத்தின் 92 விரிவுரையாளர்களுக்காக ரூபா 327,471,914 ஆன சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் அவர்கள் நிறைவேற்றிய கடமைகளை உறுதிப் படுத்துவதற்கு உரிய தகவல்கள் எதுவும் கணக்காவிற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்வரும் சரியான பதிலொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிறைவேற்றப்பட்ட கடமைகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான அனைத்து சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| ii. | 1840 ஆம் இலக்க மோசடி தவிர்ப்பு கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு | மரணித்த பேராசிரியரின் விருப்பில் செய்யப்பட்ட கூற்றில் சாட்சிகளாக இரண்டு பேர் கையொப்பமிடாமல் மற்றும் பேராசிரியரின் கையொப்பம் போலியாக | இது தொடர்பில் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கை மற்றும் கண்டி நீதவான் நீதிமன்றத்தின் | அனர்த்த சட்ட ஏற்பாடுகளின் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இடப்பட்டிருந்த அவதானிக்கப்பட்டிருக்கையில் அவருக்கு உரிய ரூபா 3,273,535 ஆன ஊழியர் சேமலாப நிதியமும் அவரின் கணவருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | தீர்ப்பின் பிரகாரம், மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்வதாக | |
| iii. | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் 09 ஆம் பிரிவு | மரணித்த பேராசிரியருக்கு உரித்தாக இருந்த ரூபா 2,579,064 ஆன ஊழியர் நலன்புரி ஏனைய வாரிசுகள் தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் அவரின் கணவருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பில் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கை மற்றும் கண்டி நீதவான் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம், மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்வதாக | சட்ட ஏற்பாடுகளின் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| iv. | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | உரிய அமைச்சரினதும் நிதி அமைச்சரின் முன் அங்கீகாரம் இன்றி ரூபா 449,981,632 ஆன மிகை நிதியமொன்று மீளாய்வாண்டில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | நிலையான வைப்புக்கள் முதலீட்டிற்காக முன்னைய அங்கீகாரம் பெற்று கொள்வதற்கு தேவையான ஆவணங்கள் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | பல்கலைக்கழக தாபன விதிக்கோவை | | | |
| | I ஆம் பிரிவின் VI ஆம் அத்தியாயத்தின் 11.1 ஆம் பிரிவு | மரணித்த ஊழியர் ஒருவரின் மரணித்த மாதத்திற்குரிய சம்பளத்தை மாத்திரம் அண்மித்த உறவினர் ஒருவருக்கு செலுத்த முடியுமாக இருந்த போதும் மரணித்த பேராசிரியரின் மரணித்த மாதத்திற்கு சம்பளத்திற்கு மேலதிகமாக ரூபா 862,131 ஆன நிலுவை சம்பளம் மற்றம் படிகள் அவரின் கணவருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | மிகையாக செலுத்தி படிகளை ஓய்வூதிய நிதியத்திலிருந்து தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென | பல்கலைக்கழக தாபன விதிக்கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | சுற்றறிக்கைகள் | | | |
| i | 2018 நவம்பர் 26 ஆம் திகதிய 15/2018 ஆம் இலக்க | பொது முயற்சிகள் திணைக்களத்தினதும் பொது திறைசேரியினதும் அங்கீகாரமின்றி 2019 | 2018 நவம்பர் 26 ஆம் திகதிய 15/2018 ஆம் இலக்க | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 49,827,000 தொகை ஊழியர் அக்ரஹார காப்புறுதி பங்களிப்பாக தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு கொடுப்பளவு பல்கலைக்கழக நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கை மற்றும் வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த தாக | |
| ii. | 2016 மார்ச் 01 ஆந் திகதிய 04/2016 ஆம் இலக்க சுய நிதியிடல் உருவாக்க செயற்பாடு தொடர்பான சுற்றறிக்கை --------------------- | | | |
| | a 5.1.2 ஆம் பந்தி | 2020 சனவரி 01 ஆந் திகதி முதல் 2023 யூலை 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியல் செயற்படுத்தி காணப்பட்ட மொத்தம் ரூபா 297,501,367 ஆன வருமானமொன்றுடன் 98 சுயநிதியிடல் செயற்பாடுகளிலிருந்து விரிவுரை மண்டபம், ஆய்வுகூடம் மற்றும் ஏனைய வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக பல்கலைக்கழகத்திற்குபு எவ்வித பங்களிப்பினையும் வழங்கியிருக்கவில்லை. | பாதீட்டில் இதற்காக ஒதுக்கீடொன்று செய்யப்படதிருந்த போதும் 5.1.4 மற்றும் 5.2.1 ஆகிய அபிவிருத்தி விடயங்களின் கீழ் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| | b 5.2.1 மற்றும் 5.2.2 ஆம் பந்திகள் | 2017 சனவரி 01 ஆந் திகதி முதல் 2023 யூலை 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் செயற்படுத்திய உள்ளவாறான வருமானம் ரூபா 9,948,695 ஆன 10 சுயநிதியிடல் செயற்பாடுகளுக்குரிய | இத்திட்டங்கள் பல்கலைக்கழக அபிவிருத்தி நிதிக்கு நேரடியாகப் பங்களிக்காவிட்டாலும், பணியாளர் பயிற்சி போன்ற ஏனைய பங்களிப்புக்கள் பல்கலைக்கழகத்திற்கு வழங்க | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எவ்வித பங்களிப்பொன்றும் பல்கலைக்கழக அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | |
| iii | 1989 ஒக்தோபர் 20 ஆந் திகதிய 408 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் 05(d) பந்தி | சம்பளமற்ற ஏழு வருட விடுமுறை பெற்றுக் கொண்ட பின்னர் சம்பளத்துடன் வருடாந்த விடுமுறை பெற்றுக் கொண்ட 03 உத்தி யோகத்தர்களுக்கு செலுத்தி இருந்த ரூபா 9,081,981 ஆன சம்பளம் மற்றும் படிகள் மீளாய்வாண்டு இறுதிவரை அறவிடப்பட்டு இருக்கவில்லை | இந்த உத்தியோகத்தர்களு க்கு செலுத்திய கூடுதலான சம்பளம் மற்றும் படிகள் ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்தும் பணிக்கொடை நிதியத்திலிருந்தும் அறவிடுவதற்கு தறற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக . | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக நிதி விளைவுகள் ரூபா 342,546,289 ஆன பற்றாக்குறையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் பற்றாக்குறை ரூபா 77,582,289 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 264,964,800 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிற்கு தனியார் படிகள் செலவினம், பராமரிப்பு செலவினம் உடன்படிக்கை சேவை செலவினம் கல்வி நடவடிக்கைகளுக்காக நிதி உதவிச் செலவினம் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் சேவை புரிந்த விரிவுரையாளர் ஒருவர் கல்வி மற்றும் வருடாந்த விடுமுறை பெற்றுக்கொண்டு 2019 திசெம்பர் 30 ஆம் திகதி முதல் 2023 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 03 அரச நிறுவனங்களில் ரூபா 24,129,082 ஆன சம்பளம் படிகள் மற்றும் பதில் கடமை படிகளை பெற்றுக் கொண்டிருந்தார். அக்கால பகுதிக்குள் கல்வி ஆராய்ச்சி மற்றும் வாழ்க்கைச் செலவின படிகளாக ரூபா 9,636,043 என இரண்டு நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொண்டிருந்தார். அவ்வாறு கல்வி விடுமுறை காலப்பகுதியில் | எதிர்காலத்தில் சரியான சான்றுகள் மற்றும் இணைப்புடன் கூடிய பதிலொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | இரு முறை செலுத்தப்பட்ட படிகள் அறவிடப்பட வேண்டியதுடன் இதுவரை மீளளிக்கப்படாத பவணத்ஜ விரைவில் மீளளிக்க வேண்டும். ப |

| | | | |
|---|---|---|---|
| | தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தினால் செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் பணிகள் ரூபா 6,110,666 தொகையை ஆண்டின் இறுதி வரையில் மீண்டும் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | AHEAD செயற்திட்டத்தின் கீழ் புலமைப்பரிசில் மானியம் பெற்றுக் கொண்டிருந்த 05 விரிவுரையாளர்கள் உடன்படிக்கை மீறிய காரணத்தினால் அந்த விரிவுரையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகையில் ரூபா 61,569,383 மீளாய்வாண்டின் இறுதிவரையில் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | அறவிட வேண்டிய அளவினை சேமலாப நிதியத்திலிருந்தும் பணிக்கொடை நிதியத்திலிருந்தும் அறவிடுவதற்காக நடவடிக்கைகளை எடுப்பகாக | குறித்த பணத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2017 ஆம் ஆண்டு முதல் 2023 ஒக்டோபர் வரையான காலப பகுதிக்குரிய ரூபா 3,455,500 ஆன 06 ஆராய்ச்சி மானியங்கள் உரிய திகதியில் பூர்த்தி செய்யாத காரணத்தினால் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக அந்த ஆராய்ச்சி மானியம் வேறு ஆராய்ச்சிகளுக்காக பயன்படுத்துவதற்கு இருந்த சந்தர்ப்பமும் இழக்கப்பட்டு இருந்தது. | இந்த ஆராய்ச்சி கொடைகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் உரிய அறவீட்டிற்காக எதிர்காலத்தில் நடவடிக்கைகளை எடுப்பகாக | குறித்த அறவீட்டிற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கலைப் பீடத்தின் கல்வி நடவடிக்கைகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இரண்டு தற்காலிக விரிவுரையாளர் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தாமல் பீடாதிபதி அலுவலகத்தில் வெவ்வேறு செயற்திட்டங்களில் தொழிற்பாட்டு நடவடிக்கைனளில் ஈடுபடுத்தி மீளாய்வாண்டில் ரூபா 1,913,090 ஆன சம்பளம் மற்றும் படிகள் வழங்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் உரிய சான்றுகளுடன் பதில் ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இரண்டு தற்காலிக விரிவுரையாளர் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும் |
| (உ) | 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட வேலை பொறியியலாளரின் குற்றத்தை உறுதிப்படுத்த முடியாமையாமையால் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தபப்பட்டிெருந்தார்.<br>பல்கலைக்கழகத்திற்கு எவ்வித நேரடி சேவையும் வழங்காமல் இருக்கையில் அக் காலப்பகுதிக்காக ரூபா 4,623,485 ஆன சம்பளம் மற்றும் படிகளை கொடுப்பனவு செய்ய நேர்ந்திருந்தது. | முறையான ஒழுக்காற்று பரிசோதனையில் ஒன்று மூலம் எவ்வித நிதி முறைகேடொன்று வெளிப்படுத்தப்படாமை காரணமாக சம்பளமற்ற காலப்பகுதிக்காக சம்பளத்தை வழங்குவதற்கு ஆளகை சபை தீர்மானித்து நிலுவை சம்பளம் மற்றும் படிகளை வழங்கியதாக | உத்தியோகத்தர் ஒருவரின் வேலையை இடைநிறுத்துவதற்கு முன்னர் வெளிப்படையாகவும் கவனமாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் செலுத்திய சம்பளனம் மற்றும் படிகளை பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | கேட்டு விலகல் திகதிக்கு 03 மாதங்களுக்கு முன்னர் முன் அறிவித்தலின்றி 2020 சனவரி 01 ஆந் திகதி முதல் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் இராஜினாமா செய்திருந்த 59 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 12,232,161 தொகையான 03 மாதச் சம்பளம் அறவிடப்படாமல் கேட்டு விலகலுக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் உரிய சான்றுகளுடன் பதில் ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அறவிடப்பட வேண்டிய சம்பளம் மற்றும் படிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | விஞ்ஞான பீடத்திற்குரிய 09 திணைக்களங்களில் 04 கலவி பாடநெறிகளுக்காக அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை அனுமதிப்பதற்கு எதிர்கார்த்த மாணவர் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது 01 சதவீதம் முதல் 16 சதவீதம் வரையான குறைவு காரணமாக கடந்த 03 ஆண்டுகளில் விஞ்ஞான விடயத்தை பின்பற்றும் 152 மாணவர்களுக்கு பல்கலைக்கழக தகைமை இழக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் உரிய சான்றுகளுடன் பதில் ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | எதிர்பார்த்த மாணவர் எண்ணிக்கை உயர் இலளவுடன் கூடிய அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 ஆராய்ச்சி நிதியங்களுக்குரிய ரூபா 1,932,972 தொகை ஓராண்டுக்கு மேற்பட்ட காலமாகவும் 14 நிதியங்களுக்குரிய ரூபா 15,270,168 தொகை ஓராண்டு காலமாகவும் ஏனைய 02 நிதியங்களுக்குரிய ரூபா 1,951,178 ஓராண்டுக்கு மேற்பட்ட காலமாகவும் விளைவற்று காணப்பட்டன. | மீளாய்வாண்டின் போது இந்நியத்தின் கீழ் கொடுப்பனவிற்காக வேண்டுகோள் எதுவும் இடம் பெறவில்லையென்பதாக | நிதியங்களை உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கலை பீடத்திற்காக ரூபா 35,526,904 தொகை செலவு செய்து 2021 யூலை 12 ஆந் தினகதி பொருத்தப்பட்டிருந்த மின் தூக்கிகள் 02 ஆண்டுகளாக விளைவற்றும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் காணப்பட்டது. | இம்மின் தூக்கி விசேட தேவையுடைய மாணவர்களுக்காக பொருத்தப்பட்டு இருந்தது எனவும் மாணவர்கள் மற்றும் பதவியணிரால் பயன்படுத்தப்படவில்லை எனவும் விளைவற்ற செலவினம் ஒன்று அல்ல எனவும் | தொழில்நுட்ப பலவீனங்கள் சீராக்கப்பட்டு பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைவில் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | AHEAD செயற்திட்டத்தின் கீழ் ரூபா 12,577,600 ஆன நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் இல்லாமல் 80 மடிக் கணினிகள் கலைப்பீடத்துக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அக்கணனிகளில் 35 கணனிகள் 05 மாதங்கள் முதல் 09 மாத காலப்பகுதி வரை பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் விளைவற்ற வகையில் காணப்பட்டன. | இக்கணினிக்காக வழங்கப்பட்டிருந்த உத்தரவாக காலத்தில் அக் கம்பனி ஊடாக திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததாகவும் உரிய கம்பனியுடன் எதிர்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு உள்ளதாகவும் | நிர்ணயிக்கப்பட்ட தரத்துடன் கூடிய கணணிகளை கொள்வவு செய்ய வேண்டியதுடன் அவை முறைப்படி பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வி அபிவித்திக்காகவும் சமமான பாதுகாப்பு வழங்கும் நோக்கில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,748,500 பெறுமதியான 18 டெப் (Tab) இயந்திரங்கள் மற்றும் 03 கனணிகள் மீளாய்வாண்டில் இறுதி திகதி வரையில் 02 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக விளைவற்று காணப்பட்டது | 18 Tab இயந்திரங்கள் புதிய கல்வி தவணை வரும் மாணவர்களுக்காக வைக்கப்பட்டுள்ளதாகவும் 03 கணினிகளில் ஒன்று பீடாதிபதி அலுவலகத்திலும் 02 அழகிய கலை கல்வி நிலையத்திற்கும் வழங்கப்பட்டுள்ளதாக | கணினி உப பாகங்களை ஆகக்கூடிய பயன் தரக்கூடியதுடன் கொள்வனவு செயயும் நோக்கத்துக் உட்படுத்ததாக பயன்படுத்தப்பட வேண்டும் |

**3.4 செயற்திட்ட அல்லது மூலதன வேலை தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு முதல் 2023 ஒக்டோபர் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 17,261,711 ஆன 31 ஆராய்ச்சி செயற்திட்டங்களில் ஆராய்ச்சி மானியங்கள் உரிய திகதியில் பூர்த்தி செய்யவோ அல்லது ஆராய்ச்சி செயற்திட்டங்களின் காலஎல்லையை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரைி ரூபா 1,555,000 தொகை அதற்காக செலவிடப்பட்டிருந்தது. | இரத்துச் செய்யப்பட்ட ஆராய்ச்சி மானியங்களுக்குரிய ஆராய்ச்சி பெறுனர்களிடமிருந்துர் அறவிடுவதற்கும் ஏனைய வற்றின் செயற்திட்டங்களின் காலஎல்லையை நீடிப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக | இரத்துச் செய்யப்பட்ட ஆராய்ச்சி மானியங்களுக்குரிய ஆராய்ச்சி பெறுனர்களிடமிருந்து அறவிட வேண்டியதுடன் ஏனைய ஆராய்ச்சிகளின் நடவடிக்கையை உரிய கால எல்லைக்குள் பூர்த்தி செய்ய வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கலை பீடத்தின் ஏழு மாடி கட்டிட நிர்மாண நடவடிக்கைகள் ரூபா 439,602,148 செலவிடப்பட்டு வேலை பூர்த்தியாகி 17 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் கட்டிடத்திற்கு நிரந்தர மின் இணைப்பு பெற்றுக் கொள்வதற்கு முடியாமை காரணமாக கட்டிடத்தின் ஆகக்கூடிய இயலுமையுடன் பயன்படுத்த முடியாதிருந்தது. | இக்கட்டிடத்திற்கு ட்ரான்ஸ்போர்மர் மூலம் உள்ளக மின் இணைப்பினை தளத்தின் ஊடாக வழங்குவதற்கு இலங்கை மின்சார சபையுடன் தேவையான நடவடிக்கைகளை செயற்படுத்தியுள்ளதாக | நிரந்தர மின் இணைப்பொன்று பெற்றுக்கொண்டு கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்தின் கட்டிட நிர்மாணம் மதியுரை செயற்பாடு பல்கலைக்கழகத்தின் பொறியியல் வடிவமைப்பு நிலையத்துக்கு (EDC) கையளிக்கப்படாமல் வெளி நிறுவனம் ஒன்றிற்கு வழங்கி ரூபா 2,876,116 ஆன கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. | அது பல்கலைக்கழக நிறுவனம் ஒன்றாக இருப்பதால் கொடுப்பனவு செய்ய முடியாது ஆதலால் பொறியியலாளர் மதியுரை சேவைகளை ஏனைய அரசின் நிறுவனங்கள் இடமிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதாக | அரசிற்கு உயர்ந்த நன்மைகள் கிடைக்கக்கூடிய வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | 2018 ஜுலை 11 ஆம் திகதி ரூபா 714,535,924 ஆன நீர் வளங்கள் செயற்திட்டத்தின் நிர்மாணம் 2020 யூலை 10 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்வது அடிப்படையில் தேசிய நீர் வளங்கள் வடிகாலமைப்பு சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு கையளிக்கப்பட்டிருந்த போதும் அத்திகதியில் பௌதீக முன்னேற்றம் 52 சதவீதம் மாத்திரம் இருக்கையில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.<br>உடன்படிக்கை செய்யப்பட்ட கால எல்லைக்குள் நிர்மாணத்தை பூர்த்தி செய்யாமல் மீண்டும் எஞ்சிய நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு ஆரம்ப மதிப்பீட்டை மிகைத்து ரூபா 785 மில்லியன் ஆன மேலதிக மதிப்பீடு ஒன்று 2023 யூலை 20 ஆந் திகதி சபையால் மீள வழங்கப்பட்டு செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது | எதிர்காலத்தில் சரியான பதில் ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அரசிற்கு உயர்ந்த பொருளாதார நன்மைகள் பெறக் கூடிய வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் நேர் உழைப்பு அடிப்படையில் நிறைவேற்றப்பட்டு இருந்த ரூபா 85,928,622 ஆன 3621 பராமரிப்பு வேலைகள் தொடர்பாக விரிவான மதிப்பீடு, பொருள், உழைப்பு அறிக்கை மற்றும் நிறைவேற்றப்பட்ட வேலை அறிக்கை தயாரிக்காமை காரணமாக அவற்றை கணக்காவின் போது பரீட்சிக்க முடியாதிருந்தது. | எதிர் காலத்தில் சரியான பதிலொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பராமரிப்பு வேலைகள் திருப்திகரமாக மெய்மையாய்வு செய்யக் கூடிய வகையில் உரிய பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்பட வேண்டும் |
| (உ) | 2009 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் 52 புனரமைப்பு மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக செலவிடப்பட்டிருந்த மொத்தம் ரூபா 308,330,445 இற்குரிய செயற்திட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்த போதும் அதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் இனங் காணப்பட்டு அத்தொகையை அறவிடுவதற்கோ அல்லது புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்து நடைமுறை வேலைகளின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டு இருந்தது. | எதிர் காலத்தில் சரியான பதிலொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கைவிடப்பட்ட செயற் திட்டங்களுக்குரிய செலவிடப்பட்ட பணத்தை மீள அறவிடுவதற்கோ அல்லது புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பல்கலைக்கழகத்தின் நீர் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் 04 செயற் திட்டங்களின் மொத்த பொறியியலாளர் மதிப்பீடு ரூபா 100,136,000 ஆக இருந்த போதும் ரூபா 55,982,587 ஆன குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. பொறியியலாளர் மதிப்பீடு விலையை விட கேள்வி விலை 42 முதல் 52 சதவீதம் ரூபா 10036 100 ஆக இருந்தபோதும் ரூபாய் 55 982 587 ஆன குறைந்த விலை சமர்ப்பித்த கேள்வி சார்ருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது பொறியியலாளர் மதிப்பீடு விலையை விட கேள்வி விலை 42 சதவீதம் முதல் 52 சதவீதம் வரை விலகலும் அளவீட்டு பத்திரங்களில் பிரதான வேலை விடயங்களில் 23 முதல் 97 சதவீதம் வரை விலகல் இருக்கையில் உரிய விதந்துரைகள் மற்றும் தரத்துடன் நிர்மாணத்தைப் பூர்த்தி செய்ய முடியுமா என கருதாமல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரியான உரிய பதிலொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெறுகை நடவடிக்கைகள் வெளிப்படையாகவும் உரிய நியதிகளுக்கு இணங்கவும் மேற்கொள்ள வேண்டும் |